ISSN NO.2581-5938
மலர்-3, இதழ்-1, சனவரி 2020

# ஒருமைக் கதையாடல்களும் - சமயப்பரவலும்

ம. பிரசன்னா

தமிழ் உதவிப்பேராசிரியர், கலசலிங்கம் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
கிருஷ்ணன்கோவில், தமிழ்நாடு, இந்தியா.

**முன்னுரை**

இந்தியா முழுமைக்கும் நீக்கமற நிறைந்திருக்கும் வைதீக சமயங்கள் சைவம் மற்றும் வைணவம் ஆகும். இந்த இரு சமயங்களும் எல்லாத்தரப்பு மக்களிடமும் போய்ச்சேர்ந்துள்ளன. பொதுவாகக் கடவுள் நம்பிக்கை என்பது பயம் வயப்பட்டது என்பர். ஒருவகை ஆறுதல் அல்லது மடைமாற்றமே இறை வழிபாட்டின் விளைபொருள் ஆகும். மனக்காயங்கள், சஞ்சலங்கள், எதிர்பார்ப்புகளுக்கு நமக்குள்ளே இருக்கும் நம்பிக்கை மற்றும் மன வலிமை உணர்வை வளர்த்தெடுத்துக் கொள்ளும் செயல்முறையே வழிபாட்டிற்குள் அடங்கியுள்ளது. அந்த உள்ளுணர்வைத் தூண்டுவதற்குப் புறத்தூண்டலாகக் கடவுள் எனும் மையம் துணைபுரிகின்றது. இது எல்லா மதங்களுக்கும் பொருந்தும். அங்கு கூறும் அறிவுரைகள், சிக்கல்களுக்கான தீர்வாகப் பார்க்கப்பெறுகின்றது. ஒரு குறிப்பிடத்தக்க மடைமாற்ற உணர்வே பல ஆயிரம் மைல்கள் கடந்து, விரதம் பிடித்து, கரகம் எடுத்து, தீச்சட்டி ஏந்தி கடவுளர்களைத் தரிசிக்க வைக்கின்றது. இவ்வாறு வேரோடிய செயல்முறைகள் ஒரு சில காலங்களில் வந்து நின்றதன்று. காலங்காலமாய்ச் செதுக்கப்பட்டு பக்குவமாகப் பதியம் செய்யப்பட்டு மனதிற்குள் செலுத்தப்படுகின்றது. இது சைவம், வைணவம் என இரு சமயங்களிலும் வார்த்தெடுக்கப்பட்டுள்ள தன்மையினை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்காகும்.

**கடவுள் கதைகள் - பருந்துப் பார்வை**

கடவுளர்களைப் பற்றி நாம் சிறுவயதிலிருந்தே தெரிந்துகொள்ளத்தலைப்படுகிறோம். அது தாத்தா, பாட்டிகளின் கதைகளால் நமக்கு விளையாட்டாக அறிமுகப்படுத்தப்படுகின்றது. வளர் பருவத்தில் கடவுளர்களின் குணம், வலிமை பற்றியும் அவர்களுக்கு ஒவ்வாதன செய்தால் அழித்துவிடுவார்கள் என்பதைக் கதைகள் வழியாகவும், கதைப்பாடல்கள் வழியாகவும் தெரிந்துகொள்கின்றோம். ஆபத்துக் காலங்களில் கடவுள் வந்து காப்பாற்றுவார் என்றும் நமக்குக் கூறி வளர்ப்பர். பின்னர் பகுத்தறிவு துளிர்த்து இப்போது நடக்கும் குற்றங்களை ஏன் கடவுள் தடுக்க முயலுவதில்லை என்றவாறு கேள்வி கேட்டால் யுக நியதி, சம்கார காலம் என்பதையெல்லாம் வேதத்தின் துணைகொண்டு கதைகள் வழியே விளக்கம் தருவர். இவ்வாறு கடவுள் கதைகளால் நமக்குள் ஆன்மிகம் எனும் ஒரு மரபுச்செயல் கட்டமைக்கப்படுகின்றது.

தமிழ் போன்ற பழமைப் பண்புடைய கிரேக்கத்திலும் நம் போன்றே கடவுள் கதைகள் மிகுந்துள்ளன. அங்கும் மருந்துக்கு ஒரு கடவுள் துனிமியூஸி என்பவர் நம்மிடம் இருக்கும் தன்வந்திரி போல இருக்கின்றார். காதலுக்கு ஒரு கடவுள் வீனஸ் இருக்கின்றார். இவர் நம்மிடம் இருக்கும் காமன் போலக் கூறப்படுகின்றார். இவர்களில் அனைவருமே மனித குலத்திற்கு நன்மை பயத்தவர்கள் என்றவாறு காட்டப்படுகின்றனர். அவர்களால் காப்பாற்றப்பட்டவர்கள், அழிக்கப்பட்டவர்களின் பட்டியல் நம்மிடம் கதைகளாக உள்ளன. இவ்வாறு கடவுளின் செயல்பாடு ஒவ்வொன்றிற்கும் காரண காரியங்கள் மதங்களால் கற்பிக்கப்படுகின்றன. அவை கதை என்னும் வழியாக நம்மிடையே பயணம் செய்கின்றன. இதுபோல் புத்த ஜாதகக் கதைகள், விவிலிய நீதிக்கதைகள், நபிகள் நாயகம் அவர்கள் கூறும் கதைகள் என ஒவ்வொரு மதத்திற்கும் கதைத் தொகுதிகள் பலவாறு உள்ளன. இவற்றின் பொது நோக்கம், அற வழிக்கு மக்களைக் கொண்டு செல்லுதல், பயம் போக்குதல் போன்றவை ஆகும். நம் சங்கப் பாடல்களில் சூர் என்னும் தீண்டி வருத்தும் தெய்வம் பற்றிய பதிவுகளும் உள்ளன. வேலன் வெறியாடல் என்னும் பேய் ஓட்டும் நிகழ்வு பற்றிய பதிவுகளும் உள்ளன. பயம் x தெய்வக் காப்பு என்ற எதிர் இணையை காலங் காலமாகக் கதைகளால் நாம் அறிந்துகொண்டே இருக்கின்றோம்.

**சைவம் - வைணவம் : கதைத் தொகுதிகள்**

பாரத நாட்டில் இதிகாசங்கள் என்று அமைந்துள்ள கதைத் தொகுதிகள் இராமாயணம் மற்றும் மகாபாரதம் ஆகும். இவை இரண்டுமே எண்ணற்ற கதைகளையும் கடவுளர்களையும் அறிமுகப்படுத்தி வைக்கின்றன. மேற்கண்ட இரு இதிகாசங்களிலும் பெருமாளின் ஆற்றல் சொல்லப்பட்டாலும் கவனமாக மற்றொரு கடவுளாகிய சிவனைப் பற்றிய செய்திகளையும் கொண்டு நிற்பது குறிப்பிடத்தக்கது.

இராமன் ஒடிக்கும் வில்லின் பெயர் சிவதனுசு என்பதாகும். அதை ஒடித்தே அவர் சீதையைக் கரம் பிடிக்கிறார். அந்த வில் சாதாரணமாக எவராலும் தொட்டுத் தூக்கக்கூட முடியாத பலம் உடையதாகக் காட்டப்படுகின்றது. இராவணன் சிவ பக்தனாகவே காட்டப்படுகின்றான். சிவனிடம் இருந்தே மிக அரிய வரங்களைப் பெற்றவனாகவும் காட்டப்படுகின்றான். இராவணனைக் கொன்றதால் தனக்குப் பிடித்த சிவசக்தி தோஷம் போக இராமேஸ்வரத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை இராமன் செய்கிறான். மகாபாரதத்திலும் சிவன் கதை கலந்து நிற்கின்றது. சிவனிடம் பெற்ற பாசுபத அஸ்திரம் அர்ச்சுனன் கையில் இருக்கிறது. பாற்கடலைக் கடையும் போது வாசுகி பாம்பு வெளியிட்ட ஆலாகால விஷத்தை சிவபெருமான் உண்டதாகவும் புராணக் கதை உண்டு. இவ்வாறு சிவன் - திருமால் ஆகிய

இரு கடவுளர்களும் வல்லமையில் சிறந்தவர்கள். இருவருக்கும் பல தனித்துவங்கள் உள்ளன என்பதை இக்கதைகளின் வழியாக மிக நுட்பமாக வேறுபடுத்தியும் காட்டுகின்றனர். அனந்தபத்மநாபர் சிலையில் இடது கையில் திருமால் தொட்டுக்கொண்டிருக்கும் சிவலிங்கம், திருமாலுடைய பரசுராம அவதாரத்தில் அவர் பூண்டுள்ள சிவ பக்தி, அய்யப்பன் பிறப்பு வரலாறு எனப் பல்வேறு புராணக் கதைகளில் இரு தெய்வங்கள் பற்றிய பதிவுகளுமே சேர்ந்து வந்துள்ளன.

இவையன்றி சிலகதைகள் இரு கடவுளர்களிடமும் பொதுவாக உள்ளன. இவை இருவரும் சமமானவர்கள் என்பதைக் கதைகளால் புலப்படுத்தும் முயற்சியாக இருக்கலாம். சமய வாதங்கள் ஏற்பட்டுப் பிரிவினைகள் அதிகரித்த காலத்தில் பொதுமை நோக்கத்திற்காக புனையப்பட்ட கதைகளாகவும் இருக்கலாம். அந்த வகையில் இரு கதைகளை இங்கு பார்க்கலாம். அவற்றின் கரு என்பது ஒன்றே. ஆனால் காலகட்டங்கள் வேறுபடுகின்றன. எவ்வாறாயினும் கடவுளை அடைய முயலும் வழிகள் இரண்டிலும் ஒன்றாகவே காணப்படுகின்றது.

**பூசலார் மனக்கோவில் - இருதலாயீஸ்வரர் கோவில்**

அறுபத்து மூன்று நாயன்மார்களில் பூசலார் நாயனாரும் ஒருவர் ஆவார். இவர் சிவத்தொண்டர்களில் மென்தொண்டர் ஆவார். பூசல் என்ற சொல்லிற்கு அன்பு என்பது பொருளாகும். பூசலார் தொண்டை நாட்டில் திருநின்ற ஊரில் பிறந்தவர் ஆவார். சிவாலயம் ஒன்று அமைக்க எண்ணிப் பொருள்தேடும் முயற்சியில் ஈடுபட்ட அவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. தனது முயற்சியில் சற்றும் பின்வாங்காத மனத் திண்மை வாய்ந்த பூசலார் ஒரு முடிவிற்கு வருகிறார். இறைவனுக்குத் தமது உள்ளத்திலே கோவில் ஒன்றை ஆகம விதிப்படி கட்டத் தீர்மானம் செய்தார். ஒரு நல்ல நாள் பார்த்து அப்பணியையும் உள்ளத்தினாலே உள்ளத்திற்குள் தொடங்கினார். ஆலயங்கள் மண்ணுலகில் எவ்வாறு அமைக்கப்படுமோ அதே போன்று தன் எண்ணத்தால் உள்ளத்தில் அழகாய் நாட்டினார். அக்கோவிலுக்கு குடமுழுக்குச் செய்வதற்கான நாள் ஒன்றினையும் தீர்மானித்து ஒப்புதலும் பெற்றார். அதே நாளில் காடவர் கோன் என்ற பல்லவ மன்னன் மண் மீது கட்டிய சிவாலயத்திற்கும் குடமுழுக்கு நாளினை இறைவனிடம் விண்ணப்பம் செய்தார். காடவர்கோனின் கனவில் வெளிப்பட்ட சிவபெருமான் பூசலாரின் ஆலயம் செல்லப்போகும் நிலை பற்றி விவரித்தார். காடவர்கோனும் மறுப்பேதும் சொல்லாமல் பூசலாரைக் காணும் ஆவல் கொண்டு அவரைத் தேடிப் புறப்பட்டார். பூசலாரைக் கண்டு அவரது ஆலயக் குடமுழுக்கு பற்றியும் கேட்டறிந்தார். வெளி உலகில் ஒருவருக்கும் சொல்லாத தன்னுடைய உள்ளக்கோவில் பற்றி வேந்தர் ஒருவர் சொல்லுவதைக் கேட்ட பூசலார் சிவனின் பெருமையை எண்ணி அகம் மகிழ்ந்தார். அகத்திற்குள் கோவில் கட்டிய அன்பரின் பக்தியை விடத் தம்முடைய பக்தி குறைந்ததே என்று காடவர்கோனும் உள்ளத்திற்குள் ஆறுதல் சொல்லிக்கொண்டார். இன்றும் திருநின்றவூரில் பூசலாரின் பக்தித் திறத்தை மெச்சும் விதமான இருதலாயீஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. இறைவனைத் துதிக்கப் புறப்பொருட்கள் மட்டுமே முதன்மை கிடையாது. அகத்தாலும் ஆலயம் கட்டலாம். ஆண்டவன் அதிலும் குடி புகுவான் என்பதை இந்தச் சிவத்தொண்டர் வரலாறு எடுத்துரைக்கின்றது.

**பைல மகரிஷி மனக்கோவில் - கரியமாணிக்கப்பெருமாள் ஆலயம்**

வேதங்களை எல்லாம் காத்துவந்த வியாசர் தம் சீடர்களுக்கு வேதங்களைப் போதித்தார். அவர்களில் ஒருவர் பைல மகரிஷி ஆவார். இவர் அதர்வண வேதத்தைக் காப்பதற்காகப் படைக்கப்பட்டவர் ஆவார். பூசலார் நாயனார் போல் இவரது வாழ்க்கைக் குறிப்பிலும் மனக்கோவில் ஒன்று பதிவாகியுள்ளது. திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலுக்கு அருகே உள்ள கரியமாணிக்கம் பெருமாள் கோவில் தலவரலாற்றில் இவரது பக்தித் திறமும் பதிவாகியுள்ளது. பைல மகரிஷி தாமிரபரணிக் கரையில் வாழ்ந்து வந்தார். அவர் தாமிரபரணி ஆற்றில் குறுக்குத்துறையில் அமர்ந்து பெருமாளை நோக்கித் தவம் இருந்தார். அக்காலத்தில் அங்கு பெருமாள் கோவில்கள் ஏதும் இல்லாததால் தம் மனத்திற்குள்ளே பெருமாளுக்குக் கோவில் கட்டி ஒருகோடி மலர்களால் அர்ச்சனை செய்தார். அம்மலர்கள் யாவும் ஒன்று சேர்ந்து நீலமணி ரத்தினமாக மாறியது. அதில் சீனிவாசன் காட்சி தந்தார். அவரைப் பைல மகரிஷி வணங்கி மகிழ்ந்து நீலமணி நாதர் என்ற திருநாமம் அவருக்குச் சூட்டினார். அவ்விடத்தே ஒரு கோவிலும் உருவாக்கினார். அதற்கு ஸ்ரீநீல ரத்தின ஷேத்திரம் என்ற பெயரும் சூட்டினார். அக்கோவிலே இப்போது கரியமாணிக்கப் பெருமாள் ஆலயம் என்ற பெயரில் வழங்கப்பெறுகின்றது.



கரிய மாணிக்கப்பெருமாள் கோவில்

**ஒருமைக் கதைத் தொடர்பு**

மேற்கண்ட இரு கதைகளிலும் சில பொதுமைக் கூறுகள் பதிவாகி உள்ளன.

- இறையடியார்கள் இறைவனை இதயத்திற்குள்ளே கண்டு வழிபடலாம்.
- அகத்திற்குள்ளே ஆண்டவனை அடையுங்கள். அது ஆனந்த வழியாகும் என்பதை இருவரின் வரலாறுகளும் தெரிவிக்கின்றன.

- ஆடம்பரமான வழிபாட்டினை விட மன உணர்வு நிறைந்த வழிபாட்டிற்கே இறைவன் முக்கியத்துவம் தருகிறான் என்பதை இருவரது வரலாறுகளுமே பறைசாற்றுகின்றன.
- அகத்திற்குள் ஆலயம் கட்டிய இருவரது வரலாறுகளுமே புற ஆலயத்தினால் புலப்படுத்தப்படுவது காலங்காலமாக வழிபாடு நடத்தும் அடியார்களுக்குச் சிறந்த சான்றுகளாக உள்ளன.
- திருமூலரின் "உள்ளம் பெருங்கோவில்" என்ற வாக்கும் இங்கு நினைவுகூறத் தக்கது.
- இறைவழிபாடு ஏழ்மைப்பட்டவர்களுக்கும் மனத்தால் சாத்தியமே என்பதை இங்கு வலியுறுத்துகின்றது.
- பைல மகரிஷி - பூசலார் ஆகிய இருவருமே தத்தம் மனங்களில் அருவமாக இறைவனைக் கண்டுபிடித்தவர்கள் ஆவர்.

பைலரிஷிக்கு இறைவன் காட்சி தருவதோடு நின்று விடுகிறான். பூசலார் நாயனாருக்கோ அவரது பெருமையை அவரிடமே வேந்தர் ஒருவர் சொல்லுவதாக வரலாறு அமைந்து விடுகின்றது. கிடைத்த இறை அனுபவம் இருவருக்குமே ஒன்றுதான்.

வரலாற்று அடிப்படையில் பார்க்கும் போது பைலரிஷி வேத காலத்தில் வாழ்ந்தவர். அவரது கதையும் பழையது ஆகும். பூசலார் நாயனார் பல்லவர் காலத்தில் வாழ்ந்த சிவனடியார் ஆவார். இவற்றினை உற்று நோக்கும்போது சைவமோ வைணவமோ நல்லறவழி ஒன்றை போதிப்பதற்கு ஒரே மாதிரியான கதைகளை தேர்வு செய்துள்ளமை புலனாகின்றது.

## TEACHING SPIRITUALITY THROUGH MORAL TAMIL STORIES

**M. Prasanna**

Every person visits India, to enjoy the aesthetic sense of Divinity. The Olden age served as a golden age for spirituality. In a particular context, Vaishnavas and Vainava were the two clashing spiritual clans. The people tried to hail the lord as the savior. They were solely dependent on him. The lord is the one who can make miracles in the peoples" lives. Lord becomes a hero by vanishing the clutches of evil deeds present in the human heart. Moral stories served as a tool, to enrich the procreative attitude of people towards god. Every moral story starts with the rising of Evil and ends with a happy background. Mostly god taking over Asuras, evil people, and son.; Tamil Language added neutrality in the narration of these stories. Greek legends from 42.A.D talk about mythological gods. Each of these gods in general we re-attributed to natural forces. They even had a god for beauty. Religious books like Ramayana and Mahabharata try to captivate people to follow a moral path. They were guides for people to maintain a cherished life with prosperity. Lord Shiva was often the notable person in Indian Mythology. Shiva plays a multilingual role in saving people, destroying them, and serving them. People try to agonize god. God never forced people to provide anything. For an instant, even a person who believes in god and forgets to attend the temple receives the blessing of the lord. Where else a person who tries to buy god, is merely an impostor. All these effects were ultimately taken to attain Moksha.